

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 14.8.2025 அன்று பட்டாளம், கே.எம்.கார்டனில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 3.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, 1.42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, ஆ.வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கத் தொடக்க விழாவில் கலந்து கொள்வதற்காக தமிழ்நாட்டிற்கு வருகை தந்த பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களை, முதலமைச்சர் அவர்களின் சார்பாக, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.8.2025) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்த ஆங்கில புத்தகத்தை வழங்கி வரவேற்றார்.

## தொகுதி மேம்பாட்டு நிதி: ரூ.1.42 கோடியில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டல்!

# திரு.வி.க. நகர் தொகுதியில் ரூ.3.67 கோடியில் திட்டப் பணிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஆக. 27-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 3.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, 1.42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 14.8.2025 அன்று திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பட்டாளம் கே.எம். கார்டன் விளையாட்டுத் திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் தயாகம்கவி சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 3.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, 1.42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கே.எம். கார்டனில் 49.50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட விளையாட்டுத் திடலினையும், 49.80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட உடற்பயிற்சிக் கூடத்தினையும், பிரிஸ்லி நகரில் 14.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட உடற்பயிற்சிக் கூடத்தினையும், திறந்து வைத்தார்.

மேலும், B.S. மூர்த்தி நகர், டாக்டர் அம்பேத்கர் சாலை, புளியந்தோப்பு நெடுஞ்சாலை, குக்ஸ் சாலை, கொன்னூர் நெடுஞ்சாலை ஆகிய பகுதிகளில் மொத்தம் 1.04 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட பேருந்து நிறுத்த பயணியர் நிழற்குடைகளையும், அம்மையம்மாள் தெருவில் 38.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையக் கட்டடத்தினையும், நேருஜி நகர் குட்பட்பள்ளம் 1வது தெரு, ராமானுஜம் கார்டன் சச்சிதானந்தம் தெரு ஆகிய பகுதிகளில் மொத்தம் 1.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்கு மையக்கட்டடங்களையும் என கூடுதல் மொத்தம் 3.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப் பணிகளை துணை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

மேலும், பெரம்பூர் நெடுஞ்சாலையில் 31.28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்நோக்கு மையக் கட்டடம் கட்டும் பணி, நெல்வயல் சாலையில் 30.45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்நோக்கு மையக்கட்டடம் கட்டும் பணி, ராஜீவ் காந்தி பூங்காவில் 30.90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்நோக்கு மையக்கட்டடம் கட்டும் பணி, வார்டு எண் 71, 72, 73, 74, 75, 76 ஆகிய வார்டுகளில் அமைந்துள்ள சென்னை பள்ளிகளில் மொத்தம் 50.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைக்கும் பணி என மொத்தம் 1.42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கேரம், குத்துச்சண்டை, டேபிள் டென்னிஸ் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு அமைப்புகளுக்கு விளையாட்டு உபகரணங் களை வழங்கினார். விளையாட்டுத் திடலில் சிலம்பம் சுற்றுவதில் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தங்கள் திறமையை வெளிப்படுத்தியதை பார்வையிட்டு அவர்களை பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஆ.வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ. குமரகுருபரன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நகரப் பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவாக்கம் செய்யும் வகையில் நேற்று (26.08.2025) தொடங்கி வைத்ததை தொடர்ந்து, நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திருச்சிராப்பள்ளி, மேலபுதூர் புனித பிலோமினாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் பள்ளிக் குழந்தைகளுக்கு உணவு பரிமாறி, குழந்தைகளுடன் உணவருந்தினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், மாவட்ட நகர் ஊரமைப்புக்குழு உறுப்பினர் க.வைரமணி, மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




திருவண்ணாமலை மாநகராட்சி, முகல்புறா முஸ்லீம் நிதியுதவி தொடக்கப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தொடங்கிவைத்தார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாவட்ட ஆட்சியர் ப.தர்ப்பகராஜ், மாநகர மேயர் நிர்மலா வேல்மாறன் மற்றும் பலர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நகரப் பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவாக்கம் செய்யும் வகையில் நேற்று (26.08.2025) தொடங்கி வைத்ததை தொடர்ந்து, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் கூத்தைப்பார் பேரூராட்சி பாய்லர் பிளாண்ட் அரசு உதவி பெறும் நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் பள்ளிக் குழந்தைகளுக்கு உணவு பரிமாறி, குழந்தைகளுடன் உணவருந்தினார். இந்நிகழ்வில், பள்ளிக்கல்வித்துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்க தொடக்க விழா நகர்ப்புற பகுதியில் அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளிகளுக்கும் விரிவாக்கம் அரசு உதவிபெறும் பள்ளிகளில் திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னையில் காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். இதையடுத்து வடலூர் நகராட்சியில் அமைந்துள்ள ஆர்.சி உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் தொடக்க விழா மாவட்ட ஆட்சியர் சிபிஆதித்யா செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது. வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கலந்துகொண்டு திட்டத்தை தொடங்கி வைத்து மாணவர்களுக்கு உணவை பரிமாறி அவர்களுடன் அமர்ந்து உணவருந்தினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பஞ்சாப் மாநில முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில், முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் நகர்ப்புற பகுதிகளிலுள்ள அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளிகளுக்கு விரிவாக்கம் செய்த இத்திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள். அதனை தொடர்ந்து அனைத்து மாவட்டத்திலும் இத்திட்டம் விரிவாக்கம் செய்யும் பணிகள் நேற்று தொடங்கியது. நீலகிரி மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா அரசு தலைமை கொறடா கா. ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் கலந்துகொண்டு குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் பணிகளை தொடங்கி வைத்து, காலை உணவுகளை வழங்கினார்கள். நேற்று தொடங்கி வைத்த இந்திட்டத்தின் மூலம் நமது மாவட்டத்தில் 63 பள்ளிகளிலுள்ள 2645 மாணவ, மாணவியர்கள் பயன்பெறுவார்கள்.

## எஸ்.முரளி- நந்தனம் மதி எம்.சி. முன்னிலை! மயிலை கிழக்குப் பகுதி

# மாவட்ட முன்னாள் பிரதிநிதி எஸ்.பழனி இல்லத் திருமண வரவேற்பு!

## அமைச்சர் பி.கீதாஜீவன் - மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வாழ்த்துகின்றனர்!

*சென்னை, ஆக. 27*

*மயிலை கிழக்கு பகுதி முன்னாள் மாவட்டப் பிரதிநிதி எஸ்.பழனி கீதா பழனி ஆகியோரின் புதல்வி எஸ்.பி.பவித்ரா என்கிற திவ்யலஷ்மி சாய் மனோஜ் ஆகியோரின் திருமண வரவேற்பு விழா இன்று (27.08.2025) மாலை 6 மணி அளவில் மோகனா திருமண மண்டபம், வேளச்சேரியில் நடைபெறுகிறது.*



*மயிலை கிழக்கு பகுதி கழகச் செயலாளர் எஸ். முரளி, மயிலை மேற்கு பகுதி கழக செயலாளர் நந்தனம் மதி எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*இம்மணவிழா வரவேற்பில் தூத்துக்குடி மாவட்டச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதாஜீவன், சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலைத.வேலு எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.*

*இவ்விழாவில் அ.ரேவதி எம்.சி., வே. வெற்றிவேல், 125 'அ' வட்ட கழக செயலாளர் கோ.அன்புகபாலி, மயிலை பகுதி நிர்வாகிகள் எஸ். முனுசாமி, சீமன், சேகர், பி.எல்.தாஸ், எ.குமாரி, எல்..உதயகுமார், மயிலை பகுதி வட்ட கழக செயலாளர்கள் ஏ.தாஸ், மா.பா.அன்பு, அ.தவனேசன், கோ.கண்ணன், துரை பார்த்திபன், பா. பொன்னுசாமி, மற்றும் மயிலை கிழக்கு மேற்கு பகுதி கழகத்தை சார்ந்த வட்டக் கழக செயலாளர்கள், மாநில மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*

*இவ்விழாவிற்கு வருகை தரும் அனைவரையும் பகுதி முன்னாள் மாவட்டப் பிரதிநிதி எஸ்.பழனி பி.கீதா பழனி ஆகியோர் வரவேற்கின்றனர்.*